## மெய்நிகர் மின்னிலக்கப் பயிற்சி -

கைப்பேசி / கைக்கணினி பயன்படுத்தி அங்கத்தில் சேரும் முறை

செயல் 1: உங்களது கையடக்கச் சாதனத்தில் Zoom செயலியைப் பதிவிறக்கம் செய்யுங்கள்.

**ஆப்பிள் ஆப் ஸ்டோருக்கு அல்லது அண்ட்ராய்ட் பிளே ஸ்டோருக்குச்** சென்று Zoom செயலியைப் பதிவிறக்கம் செய்து செயற்படுத்துங்கள்.




1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்கம் செய்ய “Get” மீது தட்டுங்கள்.




2. அண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், செயலியைப் பதிவிறக்கம் செய்ய “Install” மீது தட்டுங்கள்.

செயல் 2: மெய்நிகர் மின்னிலக்கப் பயிற்சி அங்கத்தில் சேர, மின்னஞ்சலில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட Zoom இணைப்பு **https://go.gov/sg/JoinVDC** மீது கிளிக் செய்யுங்கள்.

*குறிப்பு: தயவுசெய்து இணையைப் பதிவின்போது நீங்கள் தேர்ந்தெடுத்த ஆலோசனை நேரத்திற்கு 15 நிமிடத்திற்கு முன்பாகச் சந்திப்பு அறையில் சேருங்கள்.*

**மின்னஞ்சலில் அல்லது குறுந்தகவலில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட Zoom இணைப்பு மீது கிளிக் செய்யுங்கள்.**




1. உங்கள் பெயரை நிரப்பி, ஒலியுடன் இணைத்து, காணொளியைச் செயற்படுத்துங்கள். “Join Meeting” மீது தட்டுங்கள்.




2. சந்திப்பின் மறைச்சொல்லை நிரப்பி, “Continue” மீது தட்டுங்கள்.




3. Zoom உங்கள் கேமராவை இயக்குவதற்கு “OK” மீது தட்டுங்கள். “Join with video” தேர்ந்தெடுங்கள்.




4. Zoom உங்கள் மைக்ரோஃபோனை இயக்குவதற்கு “OK” மீது தட்டுங்கள்.




5. Zoom சந்திப்பில் ஒலி கேட்க, “Join Audio”, “Call using Internet Audio” மீது தட்டுங்கள்.

# மெய்நிகர் மின்னிலக்கப் பயிற்சி -

கணினி / மடிகணினி பயன்படுத்தி அங்கத்தில் சேரும் முறை

செயல் 1: மின்னஞ்சலில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட Zoom இணைப்பு **https://go.gov/sg/JoinVDC** மீது கிளிக் செய்யுங்கள்.

*குறிப்பு: தயவுசெய்து இணையப் பதிவின்போது நீங்கள் தேர்ந்தெடுத்த ஆலோசனை நேரத்திற்கு 15 நிமிடத்திற்கு முன்பாகச் சந்திப்பு அறையில் சேருங்கள்.*

## கணினியில் / மடிகணினியில் Zoom செயலியைப் பதிவிறக்கம் செய்திருப்பவர்களுக்கு.




1. உங்கள் கணினியில் / மடிகணினியில் Zoom செயலி இருந்தால், “Launch Meeting” மீது கிளிக் செய்யுங்கள்.




2. Zoom செயலியைச் செயற்படுத்த “open zoom.us” மீது கிளிக் செய்யுங்கள்.




3. சந்திப்பை நடத்துபவர் உங்களை அறைக்குள் அனுமதிக்கும் வரை நீங்கள் காத்திருக்கும் அறையில் இருப்பீர்கள்.

## கணினியில் / மடிகணினியில் Zoom செயலியைப் பதிவிறக்கம் செய்யாதவர்களுக்கு.




1. உங்கள் கணினியில் / மடிகணினியில் Zoom செயலி இல்லாவிட்டால், “Download Now” மீது கிளிக் செய்யுங்கள்.




2. Zoom செயலியின் பதிவிறக்கம் தொடங்கும். பதிவிறக்கம் நிறைவடைந்ததும், செயலியை நிறுவ .exe கோப்பைத் திறந்திடுங்கள்.




3. Zoom செயலியை நிறுவிய பிறகு, மெய்நிகர் மின்னிலக்கப் பயிற்சி அங்கத்தில் சேர “Join a Meeting” மீது கிளிக் செய்யுங்கள். சந்திப்பை நடத்துபவர் உங்களை அறைக்குள் அனுமதிக்கும் வரை நீங்கள் காத்திருக்கும் அறையில் இருப்பீர்கள்.

<u>இணைய உலாவியிலிருந்து சேர்வோருக்கு.</u>




1. “Click here” மீது கிளிக் செய்து, “Join from your browser” தேர்ந்தெடுங்கள்.




2. சந்திப்பின் மறைச்சொல்லையும் உங்கள் பெயரையும் நிரப்பி, “Join” மீது கிளிக் செய்யுங்கள்.




3. சந்திப்பை நடத்துபவர் உங்களை அறைக்குள் அனுமதிக்கும் வரை நீங்கள் காத்திருக்கும் அறையில் இருப்பீர்கள்.